30.10.2025 O.S 390/2018 பி.வா.சா1 ராமதாஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் ராணுவத்தில் ராணுவ பட்டபடிப்பு படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி சுப்புலட்சுமி என் தாயார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னுடன் பிறந்த சகோதரர் ஆவார். 4,5 பிரதிவாதிகள் முத்துகுமாரி, தனலட்சுமி ஆகியோர்கள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். வாதிகள் முத்துசாமி, ராமலட்சுமி கணவன் மனைவி என்றால் சரிதான். வாதிகள் வழக்கு நடத்தி வரும் சொத்தானது புல எண். 571/11ல் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் வீட்டிற்கு வடபக்கம் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட காலி மனை உள்ளது என்றால் சரியல்ல. நான் சுற்றுசுவர் அமைத்து அனுபவம் செய்து வருகிறேன். வாதிகள் வீட்டிற்கு வடபக்கம் உள்ள காலிமனையும் புல எண். 571/11ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி முத்துசாமியின் பூட்டனார் பெயர் பெருமாள் நாயுடு என்றால் சரியல்ல. 1ம் வாதியின் பூட்டனார் பெயர் எனக்கு தெரியாது. 1ம் வாதியின் பூட்டனார் பெருமாள் நாயுடு என்பவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பிறந்த தேதி 1.2.1981 ஆகும். நான் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் ஜனவரி 2001ல் இருந்து செப்டம்பர் 2018 வரை நான் ராணுவத்தில் பணிபுரிந்தேன். 1ம் வாதியின் பூட்டனார் பெருமாள் நாயுடுவின் தம்பி பெயர் இருளாச்சி நாயுடு என்றால் அது 1ம் வாதியின் பாட்டிவழி நபர் ஆவார். 1ம் வாதியின் அப்பா பெயர் சுப்பையா நாயுடு என்றால் சரிதான். 1ம் வாதியின் தகப்பனார் சுப்பையாவிற்கு இருளாச்சி நாயுடு, சங்ரையா நாயுடு மற்றும் 1ம் வாதி மகன்கள் என்றால் சரிதான். மகள் சுப்புலட்சுமி என்பவர் உள்ளார்.

சுப்புலட்சுமியின் கணவர் பெயர் அங்குசாமி ஆகும். 1ம் வாதியின் அப்பா சுப்பையா நாயுடு 2010ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். 1ம் வாதி முத்துசாமி நாயுடு வீட்டிற்கு தென்பக்கம் அவரது சகோதரர் சங்கரையா நாயுடு வீடு உள்ளது என்றால் சரிதான். இரண்டு வீடுகளுக்கும் நடுவே பொதுமுற்றம் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் அதே தெருவில் தான் 1ம் வாதியின் சகோதரர் இருளாச்சி நாயுடு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதிகளின் வீட்டிற்கு கீழ்பக்கம் தென்வடலாக பொது முடுக்கு உள்ளது என்றால் இல்லை. என்னுடைய அனுபவத்தில் 38செமீ அகலத்தில் இடம் விட்டுள்ளேன். பொது முடுக்குக்கு கீழ்பக்கம் எனது வீடு உள்ளது என்றால் அது பொது முடுக்கு இல்லை. பராமரிக்கும் இடமாகும். வாதிகளும், நாங்களும் சேர்ந்து பராமரிப்பதற்காக பொதுமுடுக்காக வைத்துள்ளோம் என்றால் இல்லை. என் வீட்டின் கதவுஎண் 2.2.65, 2.2.66, 2.2.67, 2.2.68 மற்றும் 68ஏ ஆகும். இந்த வீடுகள் அனைத்தும் தென்வடலாக ஒரே வரிசையில் உள்ளது என்றால் தென்வடலாக உள்ளது. சிறிது முன்னும், பின்புமாக அமைந்துள்ளது. எனது வீடுகள் சர்வே எண். 571/12ல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. புல எண். 571/11 மற்றும் 571/12ல் அமைந்துள்ளது. எனது வீடுகள் அமைந்துள்ள பெரும்பகுதி புல எண் 571/12ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீடுகளுக்கு அடுத்த வடபக்கம் உள்ள காலிமனை புல எண். 571/12ல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. புல எண். 571/11, 571/12 மற்றும் 571/8சி–யில் அமைந்துள்ளது. புல எண். 571/11ல் எனக்கு உரிமை உள்ளது என்பதற்கு காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஆவணங்கள், பட்டா தாக்கல் செய்துள்ளேன். எனக்கு

பாத்தியப்பட்ட சொத்துக்களை பற்றி எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், சொத்துக்களை பற்றி குறிப்பிட்டு எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பார்வையிட நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது நான் அங்கு இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு வாதி ஏதேனும் கட்டிடம் கட்டியுள்ளாரா என்றால் புதிதாக கட்டவில்லை. பராமரிப்பு செய்தார்கள். நான் கட்டிடம் கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். நானும், வாதிகளும் வழக்கு தாக்கல் செய்தபிறகு புதிததாக கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.